

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

ப.பிரதாப்



“

காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை

”

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 8193796381
9788193796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 27. வா.மு.கோமுவின் சிறுகதைகளில் சூழலுக்கேற்ற பழமொழிகள்

து. விசாலாட்சி,
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, ந.க.ம கல்லூரி, பொள்ளாச்சி.

## முன்னுரை

கதை என்று சொல்லுபவையெல்லாம் முதலில் பொழுது போக்கிற்காக தோன்றியவை ஆகும். குழந்தைகள் தூங்குவதற்காக பாட்டி, அம்மா போன்றோர் கதை சொல்லும் வழக்கம் இருந்து வருகிறது. இதனையே, பிற்காலத்தில் எழுத்தாளர் வாழ்க்கையின் பயன்பாட்டிற்காக கையாளத் தொடங்கினர்.

படிப்பவரின் மனதில் வரும் கற்பனைகள், சம்பவங்கள், கதாப்பாத்திரங்களின் தன்மை, பண்பாடு என்பன என்றும் மனதில் நிற்பவையாகும். அதனை அறிந்து கதை புனையும் ஆற்றல் உள்ளவர்களால் மட்டுமே நிலைத்து நிற்கமுடியும். உண்மை என்பனவற்றையெல்லாம் உண்மை என்று எழுதாமல் அவற்றுடன் சில கற்பனைகளையும் சேர்த்து எழுதுவது எழுத்தாளர்களின் மரபு. அவற்றில் நாட்டுப்புற இலக்கியங்களில் ஒன்றாக போற்றப்படுவதும், பெரிதும் விருப்பத்திற்கு உரியதுமான பழமொழிகளை சூழலுக்கு ஏற்றாற்போல பயன்படுத்தலாம் என்பது இவற்றின் தனிச்சிறப்பாகும். சமுதாயத்தில் நடக்கும் நிகழ்வுகளிலும், குடும்பத்தில் நடக்கும் நிகழ்வுகளிலும் காலத்திற்கு ஏற்றாற்போல் பழமொழிகளை வா.மு.கோமு பயன்படுத்தியுள்ளார்.

## பழமொழி

பழமொழி என்பது மூதறிவிலிருந்து தோன்றியமொழி. நினைப்பற்கு எட்டாத காலத்தில் இருந்தே வழங்கிவந்துள்ளன. மனித சமுதாயத்தின் அடிப்படையான வித்து பழமொழிகள் எல்லா நாட்டு மக்களாலும் பயன்படுத்தக் கூடிய அரியதொரு அனுபவ அறிவாகும்.

## பழமொழியின் தன்மை

மக்களின் வாழ்க்கையில் உயிர் பண்பும், உணர்வுப் பண்பும், அறிவுப் பண்பும் இவை இணைந்து கருவாக உருவானது வாய்மொழி இலக்கியம் என இயம்பும் பழமொழி. செய்யுள், உரைநடை போன்றவற்றில் எதுகை, மோனை, இயைபு என மாறுபட்டு பழமொழி வழங்கப்பட்டு வருகிறது. பழமொழி மரபுத் தொடர்களாகவும், ஒரே வரியில் உலக உண்மைகளை உணர்த்துபவையாகவும், அதே சமயம் மனிதனின் தன்மானத்தை தட்டியெழுப்பி சமுதாயத்தில் அவனை அடையாளம் காட்டுவதோடு மட்டுமல்லாமல், சில நேரங்களில் அவனது உயிரையும் பறிக்கும் ஆற்றல் பழமொழிக்கு உண்டு. நேருக்கு நேரான பொருளை உணர்த்துவதாக பழமொழி விளங்குகிறது.

## பழமொழிக்கு வழங்கும் வேறுபெயர்கள்

பழமொழி, தொன்னெறிமொழி, முதுமொழி, முதுசொல், தொன்றுபழமொழி. வாய்மொழி, அறம், பழஞ்சொல், முத்தோர்சொல், மூதுரை, வழக்கு, உரை, உலகமொழி, எழுதா இலக்கியம், நீதிமொழி, வசனம், மொழிமை, முன்சொல்.... என்று பல பெயர்களில் வழங்கப்பட்டு வருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் பழமொழியை 'உபகதை' என்றும் இராமநாதபுர மாவட்டத்தில் 'ஒவகதை' என்றும் பல்வேறு வடிவங்களில் வழங்கப்படுகிறது.

## பழமொழி பற்றி தொல்காப்பியர்

தொல்காப்பியர் பழமொழியை 'முதுசொல்' என்றும் முதுமொழி என்றும் கூறுகிறார். தொல்காப்பியர் சுருக்கம், நுட்பம், விளக்கம், எளிமை என்றும் குறிப்புடன் கூறுகிறார்.

"அங்கதம் முதுசொலோடு அவ்வேழ் நிலத்தும்" என்றும்,

"ஏது நுதலிய முதுமொழி எண்ப"

எனும் நூட்பாக்களின் மூலம் பழமொழி பற்றி கூறுகிறார்.

## பழமொழி பற்றி பேராசிரியர்

பழமொழியானது கருத்தை உணர்த்துவதுடன், அந்தக் கருத்தை தக்க முறையில் ஏற்றுக் கொள்வதற்கான சுருக்கம், தெளிவு, விளக்கம் உடையதாக இருக்க வேண்டும் என்று பேராசிரியர் கூறுகிறார். இதனை,

"நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்
மென்மை என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வருஉம்
ஏது நுதலிய முதுமொழி"

என்கிறார்.

## பதிணென் கீழ்க்கணக்கில் பழமொழி

அறநூல்களில் பழமொழி என்றொரு இலக்கியமே உள்ளது. ஒரு கதையையோ, வரலாற்று நிகழ்ச்சியையோ கூறி அதனை ஒரு பழமொழி மூலம் உணர்த்துவதாய் இவ்விலக்கியம் அமைந்துள்ளது. பழமொழியானது ஐந்து பெரும்பிரிவுகளில், முப்பத்தி நான்கு இயல்களாக உள்ளன. பழமொழியை உலக வழக்குப் பழமொழி, இலக்கிய வழக்குப் பழமொழி என இரண்டு வகையாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இதில் உலக வழக்குப் பழமொழிகள்,

"பாம்பறியும் பாம்பின் கால்"

"நிறைகுடம் நீர் தளும்பல் இல்"

என்றும், இலக்கிய வழக்குப் பழமொழிகளாக,

"கற்றலின் கேட்டலே நன்று"

"குலவிச்சை கல்லாமல் பாகம்படும்"

எனப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வரலாற்றுச் செய்திகளும், புராணச் செய்திகளும் சொல்லப்பட்டுள்ளது. வினை பற்றிக் கூறும் போது, சிறிய மீனைத் தூண்டிலில் இட்டு பெரிய மீனைப் பிடிப்பர்.

ஒருவர் சிறிய நன்மைகள் செய்து அதற்காக பெரிய பயனை அடைவார்கள். அது அவர்கள் செய்த நல்வினையின் பலனாகும். இதனை,

"சிறிய பொருள்கொடுத்துச் செய்த வினையால்
பெரியபொருள் கருது வாரே - விரிபூ......"

என்ற அடிகளால் அறிய முடியும்.

## சிறுகதைகளில் பழமொழி

வா.மு.கோமுவின் சிறுகதைகளில் 'எக்ஸெல் சூப்பர்' என்னும் கதையில் மதிவாணனுக்கு வண்டியே ஓட்டத் தெரியாது. அது தன் மனைவிக்கு தெரிந்தால், தன்னை கிண்டல் செய்வாள் என்று கம்பெனி முதலாளியிடம் வண்டியை விலைக்கு வாங்கி விடுகிறான். வண்டியை விலைக்கு வாங்கிய மதிவாணனுக்கு வண்டி ஓட்டத் தெரியாது. இதனைப் பார்த்த அவன் நண்பன் இராமசாமி,

"நீ ஏன் ஆடு திருடனவனாட்டே பேந்தப் பேந்த முழிச்சிட்டே நிக்கே"

என்று கேட்கிறான். "போதை ஏறிப் போச்சு" எனும் சிறுகதையில் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்றாலும், அவரவர் பழக்க வழக்கத்தாலும், குணங்களாலும் வேறுபடுகின்றனர் என்பதனை,

"அண்ணன் தம்பின்னாலும் வாயும் வகுறும் வேறவேறதான்"

என்ற பழமொழி மூலம் உணர்த்துகிறார். புரிந்து கொள்ளும் தன்மை இல்லாதவனுக்கு அறிவுரை சொன்னால் அதில் ஏறாது என்பதனை,

"ஆனவனுக்கு புத்தி சொன்னா அறிவும் நெனவும் இருக்கும் ஈனவனுக்கு புத்தி சொன்னா இருக்கறதையும் தொலச்சுட்டுதான் உக்கோந்துக்கோணும்"

எனும் பழமொழி தெளிவுபடுத்துகிறது.

தன் தம்பியைக் கொல்லுவதோடு மட்டுமல்லாமல் அவனது மனைவியையும் சேர்த்துக் கொன்றுவிட வேண்டும் என்பதனை,

"சனிப்பொணம் எந்த நாளுல தனியாப் போயிருக்குது"

என்று கூறுகிறார்.

உடன் பிறந்தவர்கள் இருவரும் சண்டையிட்டுக் கொண்டால் அது அடுத்தவர்க்கு மகிழ்ச்சியான விசயம் என்பதனை,

"ஊரு ரெண்டுபட்டா கூத்தாடிக்குக் கொண்டாட்டம்"

என்று கூறுகிறார்.

**"ஏலைசா! ஒரே தள்ளு!"** எனும் சிறுகதையில் விடுதலை விரும்பி எழுத்தாளர். அவர் முதன்முறையாக மேடையில் பேசுகிறார். தனக்கு இந்த மேடைப் பேச்சு முதல் அனுபவம் என்பதனை,

"முன்னப்பின்ன செத்திருந்தாத்தான சுடுகாடு தெரியுமிங்க"

என்று தனது பேச்சை ஆரம்பிக்கிறார் விடுதலை விரும்பி. எந்தவொரு பிரச்சனைக்கும் அடிதடி என்பது தீர்வாகாது என்பதனை,

"கத்தி எடுத்தவன் கத்தியால தான் சாவான்"

என்கிறார். இக்கதையில் சாதி அடிப்படையிலான பழமொழிகளையும் துணிச்சலாகக் கையாண்டு உள்ளதை,

"ஊரறிஞ்ச பாப்பானுக்கு பூணூலு ஒரு கேடு"

"சாணானுக்கு ஏறும் போது ஒரு புத்தி எறங்கறப்ப ஒரு புத்தி"

"காட்டவித்து கள்ளுகுடிச்சாலும் கவுண்டன் கவுண்டந்தான்"

"சாமியே சைக்கிள்ள போவுதாம் ஆண்டிக்கு புது புல்லட்டு வேணுமாம்"

"வண்ணான் பண்ணாடி ஆவப்போறதுமில்ல கழுதை ஒழவுக்கு போகப் போறதுமில்ல"

"ஒட்டனுக்கு லட்டு உருண்டையாமா, போயனுக்கு பொறி உருண்டையாமா"

என்று சாதிப்பழமொழிகளை வெளிப்படையாகக் கூறியுள்ளதைப் பாராட்டலாம்.

"ரகசியங்களை யாரிடம் சொல்ல வேண்டாம்" எனும் கதையில் ஒண்டிக் குடித்தனத்தில் வாழ்பவன் ராம்குமார் அந்த வீட்டின் உரிமையாளரின் பெண் தன்னை காதலிக்கிறாள் என்று ராம்குமாருக்குத் தெரியும். தானும் அப்பெண்ணை காதலித்தால் அது பிரச்சினையாகி இருக்க இடம் இல்லாமல் எங்கே போவது என்பதனை,

"அடுக்குச்சோத்தை நம்ப ஒடுக்குச் சோத்துக்கும் துன்பமாயிட்டார்"

என எண்ணுகிறான். ஒவ்வொரு முறையும் மீனாக்குமாரியிடம் இருந்து தப்பிப்பது,

"கழுவுற மீன்லயும் நழுவுற மீனைப் போல"

நழுவுகிறான் ராம்குமார். தன் வீட்டின் உரிமையாளருக்கு எந்த விதத்திலும் துரோகம் செய்துவிடக்கூடாது என்பதனை,

"ஊசி இடம் கொடுத்தால் தானே நூல் நுழையும்"

என்றும் உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ணக் கூடாது என்றும் எண்ணி விலகி விடுகிறான்.

## தொகுப்புரை

சிறுகதைகளில் பழமொழியைப் பயன்படுத்தி கதைகளை மேலும் விறுவிறுப்பான நிலைக்கு கொண்டு செல்கிறார்.

பழமொழிகளை சிறுகதைகளில் கையாண்டுள்ள விதம் படிப்பவரின் மனதில் ஆழப்பதிவதோடு மட்டுமல்லாமல் அதன் மூலம் கதைகளில் விறுவிறுப்பையும் ஏற்படுத்தியுள்ளார். படிப்பவரின் சிந்தனையை தூண்டுவதாயும் சிறுகதைகளில் பழமொழிகள் அமைக்கப்பட்டுள்ள உத்தி பெரிதும் பாராட்டுக்கு உரியதாகும்.

பழமொழிகள் எல்லாம் படிப்பதோடு நின்றுவிடாமல், அதனை சமுதாயத்தில் வாழும் மக்கள் பயன்படுத்தி அதன் நன்மையைப் பெரிதும் அனுபவிக்க வேண்டும் என்று ஒவ்வொரு கதைகளிலும் இடம், பொருள், காலம், சூழல் தெரிந்து கதைக்குத் தகுந்தாற் போல பழமொழிகளை கையாண்டுள்ளார் வா.மு.கோமு.